15 ஆகஸ்ட்டு 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

மரியாவின் விண்ணேற்றம்

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்



மாதாந்திர கருப்பொருள்:

**மரியா, எதிர்நோக்குதலின் தாய்**

## ஆண்டவருக்காக ஏங்கும் உள்ளம்

விண்ணக வெளிப்பாடு கொண்ட திருத்தூதர் யோவான், இஸ்ராயேலர்களின் மைய வழிபாட்டின் பொருளாக இருந்த உடன்படிக்கையின் பேழையைக் கண்டார். அந்த உடன்படிக்கை பேழையில், வானத்திலிருந்து கடவுள் வழங்கிய மன்னாவும் பத்துக் கட்டளையும் இருந்தன என விடுதலைப் பயண நூலில் பார்க்கிறோம். பாலைநிலத்திலும் வாக்களிக்கப்பட்ட நாட்டிலும் இஸ்ராயேலுக்குப் பாதுகாப்பையும் கடவுளின் உடனிருப்பையும் உடன்படிக்கை பேழை குறிக்கிறது.

தொடக்க நூற்றாண்டு காலத்தில், ஒரு பெண்ணில் உடன்படிக்கை பேழையின் தோற்றத்தை திரு அவையின் தந்தையர்கள் கண்டார்கள், அவள் நமது அன்னை மரியா. புதிய மன்னா, என்றென்றும் தலைமைக்குரு, கடவுளின் வார்த்தை முதலியவற்றின் திரு உருவாக இயேசு கிறிஸ்துவை தமது கருப்பையில் தாங்கியதால், அவள் புதிய உடன்படிக்கை பேழை. அவளது மகனின் அரச விண்ணகத்தில் திருமகனின் தாயாக முடி சூட்டப்பட்டாள். நமக்காக என்றும் இடையறாது வேண்டுகிறார்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு பற்றியும் நமது எதிர்கால உயிர்ப்பின் நம்பிக்கை பற்றியும் பவுல் பேசுகிறார். சாவிலிருந்து உயிர்த்ததால், பாவத்தையும் மரணத்தையும் கிறிஸ்து வெற்றிக் கொண்டார். தமது மகனின் மீட்புத் திட்டத்தில் பங்காற்றியதால் விண்ணகத்திற்கு மரியா எடுத்துக் கொள்ளப்பட்டது, உயிர்ப்பின் உண்மையைப் புரிந்து கொள்ள நமக்கு உதவியுள்ளது. மரியாவைப் போல் நாமும் காலம் நிறைவேறும் போது கிறிஸ்துவோடு இருப்போம்.

லூக்கா நற்செய்தி வாசகம், மரியாவின் உள்ளத்தை ஊடுருவி பார்க்கும் வாய்ப்பை வழங்கியுள்ளது. தமது உறவினரான எலிசபெத்தைக் காண எழுந்து விரைந்து போகிறாள். அங்கு செல்வது எளிதல்ல. மேடுமலை ஏறி, தடைகள் பலவற்றைக் கடந்து அவள் செல்கிறார். மரியா தூய ஆவியானவரால் நிரப்பப்பட்டு வழி நடத்தப்படுகிறார். மரியாவின் வாழ்த்தொலியை எலிசபெத் கேட்டவுடனே, அவளது கருப்பையில் இருந்த குழந்தை துள்ளியது. **இறைக்கருவியாக செயல்படும் மரியா, தமது கீழ்படிதல், அர்ப்பணிப்பு மூலம் கடவுளின் வாக்குறுதியை நிறைவு செய்தாள்.**

‘மரியாவின் பாடலில்’ தம்மீது கடவுள் கண்ணோக்கி பல ஆசீர்களை வழங்கியதற்காக தாழ்நிலையில் கடவுளைப் போற்றி மாட்சிப்படுத்துவார். கடவுளுக்கு எப்போதுமே ‘ஆம்’ என பதிலளித்து, கீழ்படிதலுடன் நம்பிக்கைமிக்க ஊழியராக மரியா இருந்தாள். நாமும் அவளது மகன் வழியாக மீட்கப்பட்டுள்ளோம். மரியாவின் உள்ளம் கடவுளை மாட்சிப்படுத்துவதைத் தவிர வேறு எதற்கும் ஏங்காது. மரியாவைப் போன்று கடவுளுக்கு அன்புப்பணி செய்வதற்கு நமது உள்ளமும் ஏங்கட்டுமே?

தாய் மரியே, இயேசுவின் திரு இதயத்திற்கு என்னையும் இட்டுச் செல்லும்.

மனனம் செய்ய இந்த வார வசனம்:

“ஆண்டவரை எனது உள்ளம் போற்றி...”

(லூக்கா 1:46)

**இன்றைய வாசகங்கள்:**

திருவெளிப்பாடு 11:19, 12: 1-6, 10;

திபா. 44: 10, 11, 12, 15 -16;

1கொரிந்தியவர் 15: 20-27;

லூக்கா 1: 39-56.

INTERNAL CIRCULATION ONLY

BUL 33/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team

api@archkl.org